# தமிழ்நாடு அரசு
# நெடுஞ்சாலைத்துறை க(ம)ப., திருச்சி மாவட்டம்.

ந.க.எண். 1464/ஆ1/2025 நாள்: 16.10.2025

# விளம்பரம் வேலைவாய்ப்பு அறிவிக்கை

(அரசாணை எண்.44/தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (T2) துறை / நாள் : 11.03.2015–ன் கீழ் வெளியிடப்படுகிறது)

திருச்சி (நெ) க(ம)ப., கோட்ட எல்லைக்குட்பட்ட அலுவலகங்களில் **காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் மற்றும் அலுவலகக் காவலர் (ஆதிதிராவிடர் குறைவு பணியிடம்) பணியிடத்திற்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை இருப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும்** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | காலிப் பணியிடங்கள் | ஒதுக்கீடு விவரம் | தகுதிகள் | | |
|---|---|---|---|---|---|
| 1. | 4 (எண்ணிக்கை) அலுவலக உதவியாளர்கள் (ஆதிதிராவிடர் குறைவு பணியிடம்) | ஆதிதிராவிடர் | 1. | வயது 01.10.2025 அன்று | SC 18-37 |
| | | | 2. | கல்வித்தகுதி | 8–ம் வகுப்பு தேர்ச்சி |
| | | | 3. | ஊதிய விகிதம் | ரூ.15,700 – 58,100 (நிலை–1) |
| 2. | 4 (எண்ணிக்கை) அலுவலக காவலர்கள் (ஆதிதிராவிடர் குறைவு பணியிடம்) | ஆதிதிராவிடர் | 1. | வயது 01.10.2025 அன்று | SC 18-37 |
| | | | 2. | கல்வித்தகுதி | தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும் |
| | | | 3. | ஊதிய விகிதம் | ரூ.15,700 – 58,100 (நிலை–1) |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, சாதி மற்றும் இருப்பிட முகவரி போன்ற சுய விவரங்களைக் குறிப்பிட்டும், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் 2 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றுகளுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணபங்களோ, படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை, உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமாகவோ 20.11.2025 பி.ப. 05.45 மணிக்குள் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத்தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்த விவரங்கள் தனியே கடிதம் மூலமாக (Call Letter) தெரிவிக்கப்படும்.
4. பணியிடங்களுக்கான தகுதியான நபர்கள் நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
5. நேர்முகத்தேர்வில் கலந்து கொள்வதற்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
6. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
7. சான்றிதழ் சரிபார்ப்பில் திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

அலுவலக உதவியாளர் / அலுவலகக் காவலர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை க(ம)ப., சுற்றுலா மாளிகை சாலை, TVS டோல்கேட், திருச்சி–20.**

**கோட்டப்பொறியாளர் (நெ)**
க(ம)ப., திருச்சி–20.

வெ.ஆ.எண்.276, செ.ம.தொ.அ. திருச்சிராப்பள்ளி

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."